01.11.2025. S.C.No.138 of 2017 D.W.1 - முரளி

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணைக்கு அனுமதிக்கப்படுகிறார்.

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

ஆம்பூர் நகர காவல் நிலையத்தில் 2011 ம் ஆண்டிலிருந்து 2016 ம் ஆண்டு வரை பணியாற்றினேன். ஆம்பூர் நகர காவல் நிலையத்தில் பணிபுரிந்தபோது என்னுடைய உயர் அதிகாரி காவல் ஆய்வாளர் என்றால் நான் காவல் துணை கண்காணிப்பாளரிடம் வேலை செய்தேன். எந்த தேதி, மாதம், வருடம் முதல் எந்த தேதி, மாதம், வருடம் வரை காவல் துணை கண்காணிப்பாளரிடம் வேலை செய்தேன் என்றால் 24.04.2014 முதல் 27.06.2016 வரை தனி அலுவலராக காவல் துணை கண்காணிப்பாளரிடம் வேலை செய்தேன். 24.04.2014 முதல் 27.06.2016 வரை என்னுடைய தனி அலுவலக பணி தொடர்பாக காவல் துணை கண்காணிப்பாளர் அலுவலக பொதுநாட்குறிப்பு, Rough Duty Roaster ஆகியவற்றில் பதிவு செய்யப்பட்டுள்ளதா அல்லது ஆம்பூர் நகர காவல் நிலைய பதிவேடுகளில் பதிவு செய்யப்பட்டுள்ளதா என்றால் ஆம்பூர் நகர காவல் நிலைய பொதுநாட்குறிப்பில் பதிவிடப்பட்டுள்ளது.

ஆம்பூர் நகர காவல் நிலைய பொதுநாட்குறிப்பில் என்னுடைய தனி அலுவலக பணி குறித்து பதிவு செய்யப்பட்டுள்ள நிலையில் என்னுடைய உயர் அதிகாரி ஆய்வாளர்தான் என்றால் நான் காவல் துணை கண்காணிப்பாளர் அவர்ளின் தலைமையின் கீழ் தனி அலுவலில் பணிபுரிந்தேன். ஆனால் என்னுடைய காவல் நிலையத்தில் ஆய்வாளர் என்னுடைய மேல் அதிகாரி ஆவார்.

Duty Roaster–ல் என்னுடைய வருகையை பதிவு செய்வது ஆம்பூர் நகர காவல் நிலையத்தில் என்றால் ஆமாம். விடுப்பு எடுத்துவிட்டு சென்றாலும் காவல் ஆய்வாளரிடம்தான் அனுமதி கேட்டு செல்ல வேண்டும் என்றால் இல்லை, DSP யிடம் வேலை செய்ததால் அவரிடம்தான் அனுமதி கேட்டு செல்வேன். அந்த காலக்கட்டத்தில் நான் விடுமுறையில் சென்றால் என்னுடைய விடுப்பு குறித்து ஆம்பூர் நகர காவல் நிலைய பதிவேடுகளில்தான் பதிவு செய்யப்படும் என்றால் ஆம்பூர் நகர காவல் நிலையத்தில்தான். PSO–ன்படி அனுமதி என்று ஒன்று உண்டா என்றால் அது எனக்கு தெரியாது. ஒரு நீதிமன்றத்தில் முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என்றால் அந்த நீதிமன்றத்தில்தான் முதல் தகவல் அறிக்கை கொடுக்கப்பட வேண்டும். அந்த நீதிமன்றத்திலிருந்து வேறு நீதிமன்றத்திற்கு முதல் தகவல் அறிக்கையை தாக்கல் செய்ய வேண்டும் என்றால் சான்றிட்ட நகல் வாங்கி தான் தாக்கல் செய்ய வேண்டும் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும்.

இந்த வழக்கில் ஆம்பூர் நகர காவல் நிலைய குற்ற எண் 206/2015 மற்றும் 208/2015 ஆகிய வழக்குகளின் முதல் தகவல் அறிக்கையின் சான்றிட்ட நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சான்றிட்ட நகல் தாக்கல் செய்யவில்லை. 16.06.2015–ல் வெங்கடேசன், தங்கராஜ், சத்தியமூர்த்தி ஆகிய எதிரிகளை ஆம்பூர் நகர காவல் நிலைய குற்ற 206/2015 வழக்கில் கைது செய்தோம் என்று காண்பிப்பதற்கு காவல் அடைப்பு அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால்

தாக்கல் செய்யவில்லை. உண்மையில் அந்த எதிரிகளை 29.05.2015 அன்றே கைது செய்து நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என்றால் ஆமாம். 16.06.2015 அன்று நாங்கள் மேற்கண்ட எதிரிகளை பிடித்தோம் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 16.06.2015 அன்றைய தினம் DSP–ன் அனுமதி பெற்று ஊருக்கு போனேன் என்பதை காட்ட ஆவணம் அல்லது ஏதாவது உத்தரவு நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. வாய்மொழி உத்தரவுதான்.

எத்தனை மணியிலிருந்து எத்தனை மணி வரை அனுமதி பெற்று போனேன் என்றால் 16.06.2015 மற்றும் 17.06.2015 ஆகிய தேதிகளில் சென்றேன். மேற்கண்ட தேதிகளில் DSP ன் அனுமதி பெற்று ஊருக்கு போனேன் என்று ஆம்பூர் நகர காவல் நிலைய ஆவணங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளதா என்றால் பதிவு செய்யவில்லை. நான் அனுமதியில் போனேன் என்ற தகவலை நிலைய ஆய்வாளருக்கு சொன்னேனா என்றால் சொன்னேன். நிலைய ஆய்வாளர் பொதுநாட்குறிப்பில் பதிவு செய்திருப்பார் என்றால் DSP யிடம் வேலை செய்கிறாய் அவரிடமே வாங்கிக்கொண்டு போ என்று சொல்லிவிட்டார்.

ஒரு போலீஸ் இரண்டு நாட்கள் அனுமதியில் விடுப்பு எடுக்காமல் போகலாம் என்று விதி உள்ளதா என்றால் தெரியாது. PSO–ல் அவ்வாறு விதி உள்ளதா என்றால் ஞாபகமில்லை. நான் நினைத்தால் DSP யிடம் சொல்லிவிட்டு எங்கு வேண்டுமானாலும் போகலாமா என்றால் DSP சொன்னால் போவோம். இரண்டு நாட்கள் அனுமதி என்பது நான் பணியில் இருந்ததாக அர்த்தம் என்றால் இல்லை.

DSPயிடம் நான் அனுமதி வாங்கி சொந்த ஊருக்கு போனதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. நான் உண்மையில் அனுமதி வாங்கி போயிருந்தால் அது குறித்து ஆம்பூர் நகர காவல் நிலைய ஆவணங்களில் பதிவு செய்யப்பட்டிருக்கும் என்றும், அவ்வாறு நான் அனுமதியில் செல்லவில்லை என்றும் அதனால்தான் எந்தவிதமான பதிவேடுகளிலும் பதிவு செய்யப்படவில்லை என்றால் வாய் மொழி உத்தரவின் பெயரில் போனேன். வாய்மொழி உத்தரவு என்று நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல.

ரகு என்பவரை எனக்கு எவ்வளவு காலமாக தெரியும் என்றால் 20 ஆண்டுகளாக தெரியும். அவர் இருசக்கர வாகன ஸ்பேர் பார்ட்ஸ் கடை எங்கு வைத்துள்ளார் என்றால் அவர் ஸ்பேர் பார்ட்ஸ் கடை வைத்திருக்கவில்லை, அவர் இருசக்கர வாகனங்களை வாங்கி விற்கும் தொழில்தான் செய்கிறார். அவர் ஆம்பூர் ராஜிவ் காந்தி சிலை அருகில் உள்ள இந்தியா ஸ்கூல் லைனில் கடை வைத்துள்ளார். எனக்கு சொந்த ஊர் ஆம்பூர் வட்டம், மோதகப்பள்ளி.

நான் இருசக்கர வாகனம் Hero Shine 15 ஆண்டுகளாக வைத்துள்ளேன். 2015-2016 காலக்கட்டத்தில் என்னிடம் மேற்கண்ட இருசக்கர வாகனம் உள்ளது என்றால் சரிதான். நான் ஆம்பூர் நகர காவல் நிலையத்திற்கு இருசக்கர வாகனத்தில்தான் வந்து செல்வேன். என்னிடம் இருசக்கர வாகனம் உள்ளபோது எதற்கு ரகு என்பவரிடம் இருசக்கர வாகனம் வாங்கிக்கொண்டு போனேன் என்றால் என்னுடைய வாகனம் பழுதடைந்துவிட்டால் அவரிடம் வாகனத்தை வாங்கிக்கொண்டு போவேன்.

நான் சொல்வது போல் அவரிடம் வாகனம் எதையும் வாங்கவில்லை என்றால் சரியல்ல. 17ம் தேதி எங்கள் ஊரில் நடந்த திருவிழா சம்பந்தப்பட்ட பத்திரிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. சசிகுமார் என்பவரை எனக்கு எவ்வளவு காலமாக தெரியும் என்றால் சுமார் 15 ஆண்டுகளாக தெரியும். 18ம் தேதி மதியம் 02.30 மணிக்கு கஸ்டடி முடித்து ஆம்பூர் நீதித்துறை நடுவரிடம் தங்கவேல் டிஎஸ்பியை ஆஜர்படுத்த அவருக்கு பாதுகாவலராக நான் ஆய்வாளருடன் சென்றேன் என்பதை காண்பிக்க பாஸ்போர்ட் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. 18ம் தேதி காவல் நிலையத்தில்தான் இருந்தேன் என்பதை காண்பிக்க பொதுநாட்குறிப்போ, Rough Duty Register தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை.

பொதுவாக ஒரு தனி அலுவலில் பணியில் இருக்கும்போது அந்த வழக்கு சம்பந்தப்பட்ட விவரங்களை தனி நபரிடம் சொல்ல மாட்டோம் என்றால் சரிதான். 18ம் தேதி காலை 10.00–12.00 மணிக்கு ஆம்பூரில் அடகுக்கடை வைத்துள்ள சசிகுமார் என்னை பார்த்தபோது செம்மரக்கடத்தல் வழக்கில் ஒரு டிஎஸ்பியை அழைத்து வந்துள்ளோம் என்ற விவரத்தை நான் சசிகுமாரிடம் சொன்னதாக சொல்லியிருப்பது தவறு என்றால் தங்கவேல் டிஎஸ்பியை கைது செய்த விவரம் செய்தித்தாள்களிலும், தொலைக்காட்சி செய்திகளிலும் செய்தி வெளியிடப்பட்டுவிட்டது.

சசிகுமார் என்பவர் எவ்வளவு காலமாக எங்கு நகை அடகு கடை வைத்துள்ளார் என்றால் ஆம்பூர் நகை கடை பஜாரில் கடை வைத்துள்ளார். நானும் சசிகுமாரும் பழனியப்பா துணிக்கடைக்கு சென்று துணி எடுத்ததாக சொல்லும் நான் அந்த துணி எடுத்ததற்கான ரசீதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். கையேந்தி பவனில் நாங்கள் சாப்பிட்டதாக சொல்லும் நான் அது யாருக்கு சொந்தமானது எந்த இடத்தில் இருந்தது என்ற விவரத்தை சொல்லவில்லை என்றால் ஆமாம் சொல்லவில்லை. அன்று இரவு 12.00 மணிக்கு ஆம்பூர் நகர காவல் நிலையத்திற்கு நான் சென்றதாக சொல்லும் நான் பொதுநாட்குறிப்பில் பதிவு செய்யவில்லை என்றால் அவர்கள் பதிவு செய்திருப்பார்கள். பொதுநாட்குறிப்பின் நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை.

17.06.2015 அன்று மாலை சுமார் 04.00 மணிக்கு பள்ளிக்கொண்டா காவல் ஆய்வாளர் 1ம் எதிரி ஷமீல் பாஷாவை அவருடைய வாகனத்தில் ஏற்றிக்கொண்டு ஓட்டுநர் மணிகண்டனுடன் சென்றார் என்றும், அப்போது அவருடன் Special Party–ஐ சேர்ந்த எஸ்எஸ்ஐ சபாரத்தினம், தலைமை காவலர் நாகராஜன், ஐயப்பன் மற்றும் நான் சென்றோம் என்றால் சரியல்ல. நான் 17ம் தேதி எங்கள் ஊரில்தான் இருந்தேன். 17ம் தேதி நான் திருவிழாவில் இருந்தேன் என்று சொல்வது வழக்கிலிருந்து தப்பிப்பதற்காக சொல்லும் பொய் என்றால் சரியல்ல. உண்மையில் நான் 16.06.2015 மற்றும் 17.06.2015 ஆகிய தேதிகளில் அனுமதி பெற்று செல்லவில்லை என்றும், இந்த வழக்கு சம்பவத்தில்தான் ஈடுபட்டிருந்தேன் என்றால் சரியல்ல.

நான் இந்த வழக்கிலிருந்து தப்பிப்பதற்காகத்தான் துணி கடைக்கு சென்றேன் என்றும், இரவு உணவு அருந்தினோம் என்றும், இரவு 12.00 மணிக்கு காவல் நிலையம் சென்றேன் என்றும் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் உண்மையைத்தான் சொல்கிறேன். நான் அனுமதி பெற்று திருவிழாவில் கலந்துக்கொள்ளவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை.**

ELAVARASAN Digitally signed by ELAVARASAN Date: 2025.11.01 15:32:05 +0530

01.11.2025. S.C.No.138 of 2017 D.W.2 - ரகு

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணைக்கு அனுமதிக்கப்படுகிறார்.

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

என் சொந்த ஊர் மோதகப்பள்ளி ஆகும். எதிரி முரளியும் மோதகப்பள்ளியை சேர்ந்தவர். அவரின் சொந்த ஊரும் அதுதான். சின்ன வயதிலிருந்து நானும், அவரும் பழக்கமானவர்கள் என்றால் ஆம் ஊர்க்காரர்கள். நல்ல பழக்கம் என்றால் ஆம். இருசக்கர வாகனங்களை வாங்கி விற்கும் தொழில் 2001ம் ஆண்டிலிருந்து செய்து வருகிறேன். நான் வருமான வரி செலுத்துகிறேன். அந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. மோதகப்பள்ளியில் நான் நாட்டாமை என்பதை காண்பிக்க நீதிமன்றத்தில் ஆவணம் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

ஊரில் திருவிழா என்றால் பத்திரிக்கை போடுவது வழக்கம் என்றால் பெரிய ஊர்களில் பத்திரிக்கை அடிப்பார்கள் எங்கள் ஊர் சின்ன ஊர் பத்திரிக்கை அடிப்பதில்லை. எத்தனை வருடங்களாக திருவிழா நடக்கிறது என்றால் எனக்கு நினைவு தெரிந்த காலத்திலிருந்து நடக்கிறது. திருவிழா நடத்த போலிசாரின் அனுமதி பெறுவோம் என்றால் ஆமாம். நோட்டிஸ் அடித்தால் அனுமதி வாங்குவோம் இல்லை என்றால் கடிதம் கொடுப்போம். எங்கள் ஊரில் சுமார் 110 வீடுகள் உள்ளது. சுமார் 400 பேர் வசிப்பார்கள். 16.06.2015 அன்று எங்கள் ஊரில் திருவிழா நடந்தது என்று சொல்வது பொய் என்றால் நடந்தது உண்மைதான்.

17ம் தேதி திருவிழா நடந்ததாகவும், அப்போது 5ம் எதிரி என்னுடன்தான் இருந்தார் என்று சொல்வது சுத்தப்பொய் என்றால் சரியல்ல. இரண்டு நாட்கள் திருவிழா. இரண்டு நாட்கள் திருவிழா என்றால் பத்திரிக்கை போட்டிருப்போம் என்றும் அந்த மாதிரி திருவிழா நடக்கவில்லை என்பதால்தான் பத்திரிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. உண்மையில் 5ம் எதிரி என்னுடன் இருந்திருந்தால் திருவிழா பத்திரிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரயில்ல. 5ம் எதிரி கேட்டுக்கொண்டதற்கு இணங்க அவருக்கு ஆதரவாக அவர் சொல்லிக்கொடுத்தது போல் நீதிமன்றத்தில் ஆஜராகி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் உண்மையில் நாட்டாமை அல்ல என்றால் சரியல்ல. 5ம் எதிரி இந்த வழக்கு சம்பவத்தில் ஈடுபட்டவர் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை.**

ELAVARASAN

Digitally signed by ELAVARASAN
Date: 2025.11.01 15:32:14 +0530

01.11.2025.                S.C.No.138 of 2017                D.W.3 - சசிகுமார்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணைக்கு அனுமதிக்கப்படுகிறார்.

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரி முரளி நகை அடகு வைக்க என் கடைக்கு வருவார் என்று சொல்லும் நான் எந்த தேதி, மாதம், வருடம் நகை வைத்தார் என்று சொல்ல முடியுமா என்றால் தேதியெல்லாம் நினைவில்லை. 15 வருடங்களாக அவர் என் கடைக்கு அடமானம் வைக்க வருவார், புதியதாக நகை கூட வாங்குவார். அவர் என்ன நகை எவ்வளவு ரூபாய்க்கு வைத்தார் என்றால் சுமார் இரண்டு மூன்று முறை ரூபாய் 10 ஆயிரம், 15 ஆயிரம் அளவிற்கு நகை அடகு வைத்திருக்கிறார். அவருடைய அண்ணன்தான் அடிக்கடி வந்து நகை அடகு வைப்பார். அவர் நகை அடகு வைத்தார் என்பரைத காண்பிக்க நகை அடகு ரசீது தாக்கல் செய்யவில்லை. நான் நகை அடகு கடை வைத்துள்ளேன் என்பதை காட்ட ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் வேண்டும் என்றால் ஆஜர் செய்கிறேன். 18.06.2015 அன்று எதிரி முரளியை பார்த்தேன் என்றும், செம்மரக்கடத்தல் வழக்கில் யாரை பிடித்து வைத்திருந்ததாக எதிரி முரளி சொன்னார் என்றால் ஒரு டிஎஸ்பியை பிடித்து வைத்திருப்பதாக சொன்னார் பெயர் தெரியாது. முரளிக்கு இரண்டு பெண் பிள்ளைகள். அந்த இரண்டு பெண்களின் பிறந்த தேதி தெரியுமா என்றால் பெரிய பிள்ளைக்கு மட்டும் 19 ம் தேதி ஜூன் மாதம் என்று தெரியும். எனக்கு திருமணமாகவிட்டது. எந்த துணி கடைக்கு துணி எடுக்க சென்றோம் என்றால் ஆம்பூரில் உள்ள ஆங்காங்க துணிக்கடைக்கு போனோம்.

என்னுடைய முதல் விசாரணையில் துணிக்கடையின் பெயரை குறிப்பிட்டு சொல்லவில்லை, துணிக்கடை என்றுதான் சொன்னேன். டிபன் கடைக்கு சென்று சாப்பிட்டோம் என்று சொல்லும் நான் யாருடைய கடை அது எங்கு உள்ளது என்று சொன்னேனா என்றால் சொல்லவில்லை. அது கையேந்தி பவன். நான் சொல்வது போல் 18.06.2015 அன்று ஆஜர் 5ம் எதிரியை நான் சொல்லும் இடத்தில் பார்க்கவில்லை என்றும், அன்று மாலை துணிக்கடைக்கு போகவில்லை என்றும், டிபன் சாப்பிடவில்லை என்றால் சரியல்ல. முரளி சொல்லிக்கொடுத்தது போல் நான் நீதிமன்றத்தில் ஆஜராகி பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரயில்ல. நான் சொன்ன தேதி மாதம் வருடத்தில் 5ம் எதிரி இந்த வழக்கு சம்பவத்தில் ஈடபட்டிருந்தார் என்றால் நான் பார்த்ததைத்தான் சொல்கிறேன். நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை.**

ELAVARASAN Digitally signed by ELAVARASAN Date: 2025.11.01 15:32:21 +0530